சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்
அசல் வழக்கு எண்.143/2014

பெயர்.குமார் (DW1) நாள்: 02.01.2020

**<u>பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் முதல் நிலை விசாரணை தொடர்ச்சி.</u>**

கடந்த 06.11.1989ம் தேதில் என் தந்தை ஆறுமுக நாயக்கருக்கும் வெங்கடேசனுக்கு இடையில் சொத்து குறித்து பரிவர்த்தனை ஏற்பட்டது, அதற்கான பரிவர்த்தனை பத்திரத்தின் அசல் **பி.சா.ஆ.1.** 12.08.2000ம் தேதியில் என் தந்தை எனக்கு எழுதிக்கொடுத்த உயில் **பி.சா.ஆ-2**. (மேற்படி ஆவணம் 1வது பிரதிவாதியின் மூலம் குறியீடு செய்வதற்கும் அதன் உண்மை தன்மை குறித்தும் வாதியால் ஆட்சேபனைக்கு உட்படுத்தப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது). என் தந்தையின் இறப்பு சான்றிதழ் **பி.சா.ஆ.3**. 20.04.2006ம் தேதியில் நான் என்னுடைய மனைவியான 11வது பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மென்ட் பத்திரத்தின் அசல் **பி.சா.ஆ-4**. (மேற்படி ஆவணம் பி.சா.ஆ.2ன் அடிப்படையில் எழுதப்பட்டுள்ளதாகவும் ஏற்கனவே பி.சா.ஆ.2ல் குறியீடு செய்ய வாதி தரப்பில் ஆட்சேபனை எழுப்பப்பட்டுள்ளதால் பி.சா.ஆ.4 குறியீடு செய்யவும் ஆட்சேபனைக்கு உட்படுத்தப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது) வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு என்னால் 30.08.2016ம் தேதியிட்ட பதில் அறிவிப்பு **பி.சா.ஆ.5**. தாவா சொத்திற்கான 09.03.2018ம் தேதியிட்ட வீட்டு வரி ரசீது **பி.சா.ஆ.6**. தாவா சொத்திற்கான 25.03.2019ம் தேதியிட்ட வீட்டு வரி ரசீது **பி.சா.ஆ.7**. தாவாவை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். (வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின் படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)